# அக்டோபர் – 27 – வெள்ளி

தூய புருமென்சியுஸ்

"நன்மதியையும் அறிவாற்றலையும் எனக்குப் புகட்டும் – தி.பா 119 : 66

## முதல் வாசகம் : உரோமையர் 7 : 18 – 25

சகோதர சகோதரிகளே! ஏனெனில், என்னுள், அதாவது வலுவற்ற என் ஊனியல்பில், நல்லது எதுவும் குடிகொண்டிருக்கவில்லை என எனக்குத் தெரியும். நன்மை செய்யும் விருப்பம் என்னிடம் இல்லாமல் இல்லை. அதைச் செய்யத்தான் முடியவில்லை. நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை. விரும்பாத தீமையையே செய்கிறேன்.நான் விரும்பாததைச் செய்கிறேன் என்றால், அதை நானாகச் செய்யவில்லை என்னில் குடிகொண்டிருக்கும் பாவமே செய்கிறது.நான் நன்மை செய்ய விரும்பினாலும், என்னால் தீமையைத்தான் செய்ய முடிகிறது. இத்தகையதொரு செயல் முறையை என்னுள் காண்கிறேன்,நான் கடவுளின் சட்டத்தைக்குறித்து உள்ளார மகிழ்ச்சியடைகிறேன்.ஆனால், என் உறுப்புகளில் வேறொரு சட்டத்தைக் காண்கிறேன் என் மனம் ஏற்றுக்கொள்ளும் சட்டத்தை அது எதிர்த்துப் போராடுகிறது. என் உறுப்புகளில் இருக்கும் அந்தப் பாவச் சட்டத்திற்கு என்னைக் கட்டுப்படுத்துகிறது.அந்தோ! இரங்கத்தக்க மனிதன் நான்! சாவுக்குள்ளாக்கும் இந்த உடலினின்று என்னை விடுவிப்பவர் யார்?நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கடவுள்தாம் விடுவிப்பார் அவருக்கு நன்றி! சுருங்கச் சொல்லின், என் மனத்தால் கடவுளின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டிருக்கும் நானே என் ஊனியல்பினால் பாவத்தின் சட்டத்திற்கும் கட்டுப்பட்டிருக்கிறேன்.

**பதில்பாடல் :** ஆண்டவரே எனக்கு உம் விதிமுறைகளைக் கற்பியும்

## நற்செய்தி : லூக்கா 12 : 54 – 59

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தைப் பார்த்து, "மேற்கிலிருந்து மேகம் எழும்புவதை நீங்கள் பார்த்ததும் மழைவரும் என்கிறீர்கள் அது அப்படியே நடக்கிறது. தெற்கிலிருந்து காற்று அடிக்கும்பொழுது மிகுந்த வெப்பம் உண்டாகும் என்கிறீர்கள் அதுவும் நடக்கிறது. வெளிவேடக்காரரே, நிலத்தின் தோற்றத்தையும் வானின் தோற்றத்தையும் ஆய்ந்து பார்க்க அறிந்திருக்கும்போது, இக்காலத்தை நீங்கள் ஆய்ந்து பாராமல் இருப்பது எப்படி? "நேர்மையானது எதுவென நீங்கள் தீர்மானிக்காமல் இருப்பதேன்? நீங்கள் உங்கள் எதிரியோடு ஆட்சியாளரிடம் போகும்போது, வழியிலேயே உங்கள் வழக்கைத் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். இல்லையேல் அவர் உங்களை நடுவரிடம் இழுத்துக்கொண்டு போக, நடுவர் உங்களை நீதிமன்ற அலுவலரிடம் ஒப்புவிப்பார் நீதிமன்ற அலுவலர் உங்களைச் சிறையிலடைப்பார். கடைசிக் காசுவரை நீங்கள் திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேறமாட்டீர்கள் என உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

**தியானம் :** நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்வில் நடைபெறும் சம்பவங்களின் அடிப்படையில் எமது எதிர்கால வாழ்வைக் குறித்து எத்தனையோ தீர்மானங்களையும், முடிவுகளையும் எடுப்பது வழக்கம். அவை சிலவேளைகளில் எம்மைச் சார்ந்ததாக அல்லது எமது குடும்பத்தைச் சார்ந்ததாக மட்டுமல்ல எமது சமூகத்தை மற்றும் எமது வாழ்வுரிமையைச் சார்ந்ததாகவும் இருக்கின்றன. ஆயினும் அவ்வாறான எமது முடிவுகளும், தீர்மானங்களும் எக்காலத்திலும் எமக்குப் பொருத்தமானதாக அல்லது நாம் எதிர்பார்த்தவாறு நன்மையாக முடிவடைந்திருக்கின்றனவா? ஆயினும் எமக்கு நித்தியத்திற்கும் தேவையான விண்ணக வாழ்வைக் குறித்து சரியான பொருத்தமான தீர்மானம் எடுப்பதற்கு இன்றைய நற்செய்தி வழியாக ஆண்டவர் இயேசு எமக்கு அழைப்பு விடுக்கின்றார். இன்றைய நற்செய்தியை நாம் ஆழமாக உற்றுநோக்கினால், இவ்வுலகில் இயற்கையாக இடம்பெறும் மாற்றங்களைக் குறித்து புவியியல் ரீதியாக கால நிலையை அல்லது பருவ காலத்தின் தன்மையை நாமறிந்து வைத்திருக்கின்றோம் என்பது தெளிவாகின்றது. ஆயினும், அவை அனைத்தையும் படைத்து ஆட்சி செய்து வருகின்ற ஆண்டவனின் வல்லமையை நாம் அறியாது வாழுகின்றோமா? என எமது அறியாமையை சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. அப்படியாயின் எமது வாழ்வில் நாமெடுக்கின்ற சகல தீர்மானங்கள் எதுவாகவிருப்பினும் அவையனைத்தும் எம்மைப் படைத்து வழிநடாத்துகின்ற எல்லாம் வல்ல பரலோக தகப்பனது சித்தத்திற்கும் திட்டத்திற்கும் உகந்தவையாக நேர்மையானதாக இருக்கின்றதா? விண்ணரசைக் குறித்த எமது எதிர்பார்ப்பும் தீர்மாணங்களும் இறை சித்தத்திற்கு ஏற்றவையாக அமையட்டும். ஏனெனில் சிறுபருவத்தினர் "கள்ளன் பொலிஸ்" விளையாட்டு விளையாடுவது போன்று ஆண்டவர் இயேசு ஏதோ ஒழிந்து மறைந்து வாழ்பவர் அல்ல. மாறாக, அவர் எமக்குள்ளே வாழுபவர். எனவே, ஆண்டவர் இயேசுவைத் தேடி அவரிடம் ஆலோசனை கேட்க நாம் வேறெங்கும் போகத் தேவையில்லை. எமக்கு நாங்களே சிறந்த நீதிபதிகள். இதுவே இன்றைய நற்செய்தி எமக்குத் தருகின்ற செய்தியாகும்.